பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
Provincial Council Complex, A9 Road, Kaithady

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: - : NP/09/FRM/R2/10/CIR.REV/2022 ~~29.11~~.2022 02.12.

**மாகாண நிதிச் சுற்றுநிருப கடித இல:- PF/CL/03/2022**

மாகாண காணி ஆணையாளர்,
மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்,
வடமாகாணம்.

**<u>வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களம், பிரதேச செயலகங்களில் காணி கடமைகளை ஆற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல்.</u>**

வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணி தொடர்பான கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான முன்மொழிவுக்கு வடமாகாண கௌரவ ஆளுநரின் அனுமதி G/NPC/A14/Land/Approval/2022ம் இலக்க 2022.10.19 ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

1. **<u>ஊக்குவிப்புக் கொடுப்பனவினை பெற தகுதியுடைய உத்தியோகத்தர்கள்.</u>**

**1.1 பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்**

1. பிரதேச செயலர்
2. உதவிப் பிரதேச செயலர்
3. கணக்காளர்
4. குடியேற்ற உத்தியோகத்தர்கள், காணி வெளிக்கள போதனாசிரியர்கள்.
5. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்
6. கிராம அலுவலர்கள்

**1.2. மாகாண காணி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள்**

1. மாகாண காணி ஆணையாளர்.
2. உதவிக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்
3. கணக்காளர்
4. குடியேற்ற உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்.

## 2. கொடுப்பனவு நிபந்தனைகள்

1. ஊக்குவிப்பு கொடுப்பனவானது செயலாற்றுகை மற்றும் அடைவு மட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்படவேண்டும் என்பதுடன், உத்தியோகத்தர்களின் அதிகரித்த செயல்திறன் மற்றும் உயர்மட்ட செயலாற்றுகை என்பவற்றை ஊக்குவிக்க வசதியளிக்கின்றது.
2. இத் திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டவாறு உத்தியோகத்தரால் கடமைகள் நிறைவேற்றிய பின்பே ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும். இது தொடர்பான அனைத்து ஆவணங்களும், பதிவுகளும் முறையாக பேணப்பட வேண்டும்.
3. இவ் ஊக்குவிப்பு கொடுப்பனவானது மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மொத்த வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்படவேண்டும்.
4. இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு இத் திட்ட முன்மொழிவில் கூறப்பட்ட நிதி ஒழுங்குவிதிகள், தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படவேண்டும்.
5. ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும்போது வேலை நிறைவேற்றப்பட்டமை, கொடுப்பனவு முறைமை மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு பிரதம செயலாளரின் முன்னனுமதி பெறப்படவேண்டும்.

## 3. ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படும் முறைமை

ஊக்குவிப்புக் கொடுப்பனவானது மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் 6% இனை பிரதேச செயலக பணிக்குழுவினருக்கு 5% என்ற அடிப்படையிலும், மாகாண காணி ஆணையாளர் திணைக்கள பணிக்குழுவினருக்கு 1% உம் என்ற அடிப்படையில் பின்வரும் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும்.

### 3.1 பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதேச செயலாளர் | - 0.8% | 5% |
| 2. | உதவிப் பிரதேச செயலாளர் | - 0.2% | |
| 3. | கணக்காளர் | - 0.2% | |
| 4. | குடியேற்ற உத்தியோகத்தர்கள், காணி வெளிக்கள போதனாசிரியர்கள் | - 2.5% | |
| 5. | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் | - 0.5% | |
| 6. | கிராம அலுவலர்கள் | - 0.8% | |

### 3.2. மாகாண காணி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாகாண காணி ஆணையாளர். | - 0.25% | 1% |
| 2. | உதவிக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் | - 0.15% | |
| 3. | கணக்காளர் | - 0.10% | |
| 4. | குடியேற்ற உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் | - 0.5% | |

மேற்படி முன்மொழிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவினை 01.01.2022 ஆம் திகதியிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

12/02

எஸ்.எம்.சமன் பந்துலசேன
பிரதம செயலாளர்

எஸ்.எம். சமன் பந்துலசேன
பிரதம செயலாளர்
வட மாகாணம்

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் செயலகம், வ.மா
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம், வ.மா
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர், வ.மா

— தகவலுக்காக